பக்கங்கள் 14+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 23 செவ்வாய்க்கிழமை 09.12.2025 | அதிர்வு 132

## பேரிடரால் ஒத்திவைக்கப்பட்ட உயர்தரப் பரீட்சை ஜனவரி 12 - 20 வரை




2025 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் பேரிடர் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட பாடங்கள் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



பேராசிரியர் தி.வேல்நம்பி




# யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவில் வேல்நம்பி முன்னிலை!



பேராசிரியர் கு.மிகுந்தன்



பேராசிரியர் இ.சுரேந்திரகுமாரன்

**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக் கான தெரிவில் உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதியும் சிரேஷ்ட பேராசிரியருமான திருநாவுக்கரசு வேல்நம்பி புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றிருக்கின்றார்.**

தற்போதைய துணைவேந்தரின் பதவிக் காலம் எதிர்வரும் மார்ச் 24 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், யாழ். பல்கலைக்கழகப் பதிவாளரால் கடந்த செப்டெம்பர் முதல் வாரத்தில் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்தவர்கள் இன்று 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விசேட பேரவைக் கூட்டத்தில் தமது எதிர்காலத் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தனர். அதனைத் தொடர்ந்து பேரவை உறுப்பினர்கள் விண்ணப்பங்களையும், அளிக்கைகளையும் மதிப்பீடு செய்து தனித்தனியாகப் புள்ளிகளை வழங்கினர்.

பீடாதிபதி தெரிவு குறித்து உள்வாரிப் பேரவை உறுப்பினர் ஒருவரால் சர்ச்சைக்குட்படுத்தப்பட்ட பீடாதிபதி ஒருவர் மதிப்பீட்டில் கலந்துகொள்ளவில்லை. உள்வாரி உறுப்பினர்களாக இருந்த போதிலும், துணைவேந்தர் தெரிவுக்காக விண்ணப்பித்திருந்தமையால் நான்கு பீடாதிபதிகளும் இம்மதிப்பீட்டில் பங்குகொள்ளவில்லை. இதனால் வெளிவாரி உறுப்பினர்களின் செல்வாக்கே மதிப்பீட்டில் அதிகமாக இருந்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் 02

# வவுனியா மாநகர சபைக்கு எதிரான இடைக்காலத் தடை உத்தரவு நீடிப்பு!

(வவுனியா நிருபர்)

வவுனியா மாநகர சபைக்கு எதிரான இடைக்காலத் தடை உத்தரவு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் எதிர் வரும் ஜனவரி 23 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாநகர சபையின் மேயர், பிரதி மேயர் ஆகியோர் அந்தப் பதவி களை வகிப்பதற்கு இடைக்காலத் தடை உத்தரவை விதித்து கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் கடந்த ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி தடை உத்தர விட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று மீண்டும் மூன் றாவது முறையாக கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தால் விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான ஜனா திபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப் பர் உள்ளிட்ட சட்டத்தரணிகள், வழக்கு பிரதி மேயருக்கு எதிராக உள்ளமையால் சபை நடவடிக்கைகளை நடத்துவதற்கு அனுமதி கோரினர்.



இதற்கு மனுதாரர் தரப்பு ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தலைமை யிலான சட்டத்தரணிகள் ஆட்சேபம் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் நீண்ட விவாதம் இடம்பெற்ற நிலையில் இவற்றை ஆராய்ந்த கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் மனு மீதான விசாரணைகள் முடிவடையும் வரை மேயர், பிரதி மேயர் ஆகியோர் அந்தப் பதவிகளை வகிப்பதற்கு வழங்கப்பட்ட இடைக்காலத் தடை உத்த ரவை எதிர்வரும் ஜனவரி 23 ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டுள்ளது.

வவுனியா மாநகர சபை உறுப்பி னர்களான க.பிரேமதாஸ் மற்றும் சு.விஜயகுமார் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்துக்கே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வழக்கின் பிரதிவாதிகளாக ஜனநாய கத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த மாநகர மேயர் சு.காண்டீபன், ஜனநாயகத் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த பிரதி மேயர் ப.கார்த்தீபன் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

குறித்த மனுவில் வவுனியா மாநகர சபையின் மேயர், பிரதி மேயர் தெரிவின் போது பிரதிவாதிகள் சட்டத்துக்கு முர ணான வகையில் தெரிவு செய்யப்பட்டுள் ளனர் என்று மனுவில் தெரிவிக்கப்பட் டுள்ளதுடன், பிரதி மேயர் ப.கார்த்தீபன் மாநகர சபை எல்லைக்குள் வசிக்காத ஒருவராக உள்ளார் எனவும், மேற்படி இருவரும் அந்தப் பதவிகளில் இருப்ப தற்குத் தகுதியற்றவர்கள் என்ற அடிப் படையில் அவர்களின் பதவிகளைச் செல்லுபடியற்றதாக அறிவுக்குமாறு கோரியும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பேரிடர் உயிரிழப்பு 638 காணாமல்போனோர் 191



இலங்கையில் ஏற்பட்ட அனர்த்த நிலைமை காரணமாக உயிரிழந்தவர்க ளின் எண்ணிக்கை 638 ஆக அதிகரித் துள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் மேலும் 191 பேர் காணா மல்போயுள்ளனர். இதேவேளை, அனர்த் தங்களால் பாதிக்கப்பட்டவர்களில் தற்போது 20 ஆயிரத்து 373 குடும்பங் களைச் சேர்ந்த 63 ஆயிரத்து 628 பேர் 630 பாதுகாப்பு முகாம்களில் தங் கவைக்கப்பட்டுள்ளனர்.

## யாழ். பல்கலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப் படையில் சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல் நம்பி முதல் நிலையையும், விவசாயபீடத் தின் முன்னாள் பீடாதிபதியும் சிரேஷ்ட பேராசிரியருமான கு.மிகுந்தன், மருத்துவ பீடாதிபதியும் பேராசிரியருமான இ. சுரேந்திரகுமாரன் ஆகியோர் முறையே இரண்டாம், மூன்றாம் நிலைகளையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங் களின் துணைவேந்தர்களைத் தெரிவு செய்வதற்கான பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் படி, பேரவையின் விசேட கூட்டத்தில் விண்ணப்பதாரிகள் பெறும் புள்ளி ஒழுங் கில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வர்களின் விவரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிப திக்கு அனுப்பி வைக்கப்படும்.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக் கப் பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் படி – ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப் படையில், பேரவையினால் முன்மொழியப் பட்ட மூவரில் இருந்து ஒருவரை ஜனாதிபதி தெரிவு செய்து, துணைவேந்தராக நிய மனம் செய்வார்.

## உயர்தரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த வருடம் ஜனவரி மாதம் 12ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை நடை பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளர் கே.எம். ஜி.எஸ். நாலக களுவெவ இதனை இன்று ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக அறிவிப்பு களைப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வெளியிடுவார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 2025 ஆம் ஆண்டுக் கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைகள் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 2ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நான்கு மாவட்டங்களில் மண்சரிவு அபாயம் மக்களை வெளியேற்றும் நடவடிக்கை ஆரம்பம்

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்துள்ள மூன்றாம் நிலை சிவப்பு நிற மண்சரிவு அபாய எச்சரிக்கையை அடுத்து, கண்டி, கேகாலை, குருநாகல் மற்றும் மாத்தளை மாவட்டங்களில் மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை, பாதுகாப்பான மையங்களுக்கு வெளியேறுமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் மாவட்ட செயலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இந்த நான்கு மாவட்டங்களிலும் பல அதி அபாயப் பகுதிகளை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அடையாளம் கண்டுள்ளது.

இதனையடுத்து, உடனடித் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மக்களை வெளியேற்றும் நடவடிக்கை இன்று முதல் 19ஆம் திகதி வரை நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது.




இந்த நடவடிக்கைகளை மாவட்ட செயலாளர்கள், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள், இலங்கைப் பொலிஸார் மற்றும் ஏனைய தொடர்புடைய அதிகாரிகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுச் செயற்படுத்தப்படும் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கண்டி மாவட்டத்தில் ஹதரலியத்த, யட்டினுவர, உடுதும்பர, பதஹேவாஹேட்ட, மெததும்பர, பஸ்பாகே கோரள, தெல்தோட்ட, பூஜாப்பிட்டிய, கங்க இஹல கோரள, பன்வில, கங்காவட்ட கோரள ஆகிய பகுதிகளுக்குச் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் உடபலாத, ஹரிஸ்பத்துவ, குண்டசாலை, மினிபே, தொளுவ, தும்பனே, அக்குரனை, உடநுவர, பததும்பர மற்றும் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தில் கேகாலை, காலிகமுவ, மாவனல்லை, புலத்கோஹுப்பிட்டிய, அரநாயக்க, எட்டியாந்தோட்டை, ரம்புக்கனை, வரக்காப்பொல மற்றும் சுற்றியுள்ள பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் மாவத்கம, மல்லவப்பிட்டிய, ரிதிகம மற்றும் சுற்றியுள்ள பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் நாவுல, வில்கமுவ, பல்லேபொல, அம்பன்கங்க கோரள, லக்கல பல்லேகம, உக்குவெல, ரத்தொட்ட, மாத்தளை, யட்டவத்த மற்றும் சுற்றியுள்ள பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# பொகவந்தலாவ கிவ் மேல் பிரிவு தோட்டத்தில் 102 குடும்பங்கள் அச்சத்தில் இடம்பெயர்வு!

**(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)**

பொகவந்தலாவ கிவ் மேல் பிரிவு தோட்டத்தில் 102 குடும்பங்கள் அச்சத்தில் நேற்றுத் தற்காலிகமாக இடம்பெயர்ந்துள்ளன.

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பொகவந்தலாவ கிவ் மேல் பிரிவு தோட்டத்தில் மண்சரிவு ஏற்படும் என்ற காரணமாக 102 குடும்பங்களைச் சேர்ந்த 211 பேர் தற்காலிகமாக நோர்வூட் சென். ஜோன் டிலரி தமிழ் வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

கிவ் மேல் பிரிவு தோட்டத்தில் மண்சரிவு அபாயம் காரணமாக நேற்று திங்கள் கிழமை மாலை இந்த மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு குறித்த பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்ற கிராமத்துக்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இதேவேளை, பொகவந்தலாவ கிவ் மேல் பிரிவு தோட்டப் பகுதியில் மண்சரிவு அபாயம் காணப்படுவதோடு குடியிருப்புகளில் பாரிய வெடிப்புகள் காணப்படுவதாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

நாங்கள் தொடர்ந்தும் இந்த பாடசாலையில் தங்க முடியாது எமக்கு வீடமைப்பு திட்டத்தை மேற்கொள்ளும்வரை எமக்கு நிரந்தமான தற்காலிக முகாம் ஒன்றை ஏற்படுத்தி தாருங்கள் என்று பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஒரே ரகம்தான்!

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் போன்ற சட்டங்களை சீர் திருத்துவதில் தாம் உறுதியாகவே உள்ளார் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மீண்டும் தெரிவித்திருக்கின்றார்.

ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டங்கள் அடக்குமுறைக்கான கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன எனவும் அவை ஜனநாயகத்திற்குப் பொருந்தாதவை எனவும் ஜனாதிபதி இந்தப் பேட்டியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

“பல தசாப்தங்களாக கட்டமைக்கப்பட்ட அமைப்புகளை நாங்கள் அகற்ற முயற்சிக்கிறோம். அரசியல் கலாசாரம் மற்றும் நிர்வாகத்தின் நிறுவனப் பழக்கவழக்கங்கள் ஒரே இரவில் மாறா. அதற்கு நிலையான முயற்சி தேவை. நாம் சரியான திசையில் நகர்கிறோமா, நமது சீர்திருத்தங்கள் பலனளிக்கின்றனவா என்பதை அனைவரும் பார்க்க வேண்டும்.” எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உண்மைதான். அவர் தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றார் என்று காட்டிக் கொண்டாலும் இவ் விடயத்தில் மக்களுக்கு - குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு - அவரின் அரசினுடைய போக்குக் குறித்து சில சந்தேகங்கள் உண்டு.

எதிர்க்கட்சி தரப்பில் அவர் இருந்த போது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு மாற்றீடாக வேறு சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்பதை முழுமையாக எதிர்த்தவர் அவர். பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அடியோடு நீக்கப்பட வேண்டும் என்பது அவரது முன்னைய - தீவிரமான - நிலைப்பாடாக இருந்தது.

தேர்தல்கள் முடிந்து அதிகாரத்துக்கு வந்ததும், முன்னர் அதிகாரத்திலிருந்த பழைய ஆட்சியாளர்கள் போல அவரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்றாக நீக்கப்பட மாட்டாது, அதற்கு பதிலாக மாற்றீட்டுச் சட்டம் கொண்டுவரப்படும் என்று குத்துக்கரணம் அடித்தார்.

இப்போது அவரது ஆட்சிக் காலம் ஒரு வருடம் தாண்டியும் இவ்விடயம் பெரிய அளவில் முன்நகர்வதாக இல்லை.

கடந்த செப்டம்பரில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டம் நடைபெற இருக்கையில் இதோ மாற்றீட்டு சட்டம் செப்டம்பரில் வந்துவிடும் என்று அவரது அரசு நாடாளுமன்றத்திலேயே அறிவித்தது.

அந்த அறிவிப்பு வெளியாகி மூன்று மாதங்கள் ஆகிவிட்டன.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மாற்றான சட்டம் இதோ வருகிறது என்று தொடர்ந்து கதை வருகின்றதே தவிர விடயம் வருவதாகத் தெரியவில்லை.

அவர் கூறுகின்றமை போல பல தசாப்தங்களாக கட்டமைக்கப் பட்ட அரசு நிறுவன முறைமையில் இத்தகைய சட்டங்களை கொண்டு வருவது ஓர் இரவில் சாத்தியமற்றது தான். ஆனால் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோடு அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசுக்கு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அடியோடு ஒழிப்பதாகத் தேர்தலுக்கு முன்னர் அது பண்ணி வந்த ஆக்ரோஷ ஆரவாரங்களின் அடிப்படையில் இவ்வளவு கால இழுத்தடிப்பு நியாயப்படுத்த முடியாததே.

இந்த விடயத்தை எப்போதோ அவரது அரசு நடத்தி முடித்திருக்க வேண்டும். அதை விடுத்து இந்த விவகாரத்தில் - பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கும் விடயத்தில் - இடம் பெறும் தேவையற்ற கால தாமதமும் இழுபறியும் அநுரகுமார திஸநாயக்கவின் அரசும் முந்தியவற்றுக்கு மாறானது அல்ல, ஒரு குட்டையில் ஊறிய மட்டை வகையறாதான் என்பதை உறுதிப்படுத்துவனவாகவே உள்ளன.



### சாய்ந்தமருது பொலிவேரியன் எஹெட் வீட்டுத்திட்டத்தில்

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசின் 25,000 ரூபா நிவாரணம் வழங்கப்பட்டது

(நூருல் ஹுதா உமர்)

அண்மையில் ஏற்பட்ட கனமழை மற்றும் திடீர் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சாய்ந்தமருது பொலிவேரியன் எஹெட் வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் குடும்பங்களுக்கு அரசின் 25 ஆயிரம் ரூபா அவசரநிலை நிவாரண உதவித்தொகை இன்று சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் இந்த நிதி வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உடனடி தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், வீடுகளில் ஏற்பட்ட சேதங்களைச் சரிசெய்வதற்கும், அவசியமான வாழ்வாதாரப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளவும் இந்த உதவித்தொகை உதவுவதாக பிரதேச செயலாளர் இதன்போது தெரிவித்தார்.

வெள்ளத்தால் அந்தப் பகுதியில் பல வீடுகள் நீரில் மூழ்கி, வீட்டு உபயோகப் பொருள்கள், கல்வி உபகரணங்கள் உள்ளிட்ட பல பொருள்கள் சேதமடைந்தன.



சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிவாரண நிதி வழங்கல் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முஆபிகா, நிர்வாக உத்தியோகத்தர், நிதி உதவியாளர், நிர்வாக கிராம நிலதாரி, பிரதம முகாமைத்துவ சேவை அதிகாரி உட்பட பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கலந்து கொண்டனர். பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சிரமங்களை குறைக்க அரசாங்கம் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும், மீதமுள்ள பகுதிகளில் மதிப்பிடல் பணிகளும் அதனடிப்படையிலான நிவாரண உதவிகளும் தொடரும் எனவும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் இதன்போது குறிப்பிட்டார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவியை வழங்க அரசு எடுத்த இந்த நடவடிக்கை, சமூக நலனுக்கான முக்கிய முயற்சியாகப் பாராட்டப்படுகிறது.

# மட்டக்களப்பில் இரத்ததானம்!

(பழுவூரான்)

நாட்டில் எதிர்பாராமல் பேரிடரால் ஏற்பட்ட இரத்தத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் “உதிரம் கொடுப்போம், உயிரைக் காப்போம்” எனும் தொனிப் பொருளில் மட்டக்களப்பு ஐ.டி.எம். கல்வி நிறுவன ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

நிறுவன ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் முகமாக வருடம் தோறும் நடைபெறும் இரத்ததானம் வழங்கும் நிகழ்வுக்கு அமைய இந்த வருடத்துக்கான நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

நிறுவனப் பணிப்பாளர் ரி. சசிக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிராந்திய முகாமையாளர் கே. கேதீஸ்வராஜா, பிரதி முகாமையாளர் ஆர். ஜதீஸ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த இரத்ததான நிகழ்வுக்கு காத்தான்குடி ஆதார வைத்தியசாலை இரத்தவங்கி வைத்தியர் திருமதி நித்தியானந்தனா தலைமையில் தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டு குருதிச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.





# சிவானந்தா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் நிவாரணப்பணி!

(பழுவூரான்)

மட்டக்களப்பு கல்லடி – உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் மக்களின் பங்களிப்பில், அண்மையில் கோரத் தாண்டவம் ஆடிய புயல் மற்றும் அடைமழையால் வெகுவாகப் பாதிக்கப் பட்ட மாத்தளை மக்களுக்கு நிவாரணப் பணிக்காகப் பொருள்கள் பொதி செய் யப்பட்டுள்ளன.

மாத்தளை நோக்கிச் சென்று அங்கு மிகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவை பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என்று பழைய மாணவர் சங்கச் செயலாளர் இ.சாஜிராஜன் தெரிவித்தார்.

இந்தப் பணியில் மட்டக்களப்பு கல் லடி உப்போடை ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் உதவிப் பொது முகாமையாளர் உமாதீஸ்வரானந்தாஜீ, சிவானந்தா தேசிய பாடசாலை அதிபர் எஸ்.தயா பரன், பழைய மாணவர் சங்கத் தலைவர் வி.வாசுதேவன், செயலாளர் இ. சாயிராஜன், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ்.ரவீந்திரன் உட்பட உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண் டனர்.





# பேரிடரால் பாதிக்கப்பட்ட துல்ஹிரிவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் நேரில் விஜயம்!

டித்வா சூறாவளி புயலால் ஏற்பட்ட பேரிடர் நிலைமைக்கு மத்தியில், மகா ஓயா பெருக்கெடுப்பால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு அச்சுறுத்தலை எதிர் கொண்ட துலிஹிரிய பிரதேச மக்களின் பிரச்சினைகளை ஆராய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷ இன்று அப் பிரதேசத்துக்கு விஜயம் செய்தார்.

இடைத்தங்கல் முகாமில் இருந்த மக் கள், தங்கள் வீடுகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் தற்போது மண்சரிவு ஏற்படும் அபாயம் காணப்படுவதால் தங்கள் உயி ருக்கு ஆபத்து இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவரிடம் தெரிவித்தனர்.

துல்ஹிரிய பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவால் அவர்களது குடும்பங்களைச் சேர்ந்த பலர் உயிரிழந்துள்ளனர். புதை யுண்டுபோன அவர்களின் உடல்களை மீட்பதற்குத் தேவையான உதவிகளை அரசு உரியவாறு பெற்றுக் கொடுக்காத நிலையை இங்கிருந்தோரின் பேச்சுக் களில் இருந்து அவதானிக்க முடிந்தது. உயிரிழந்தோரின் உடல்களை தோண்டி எடுத்து, குடும்ப உறுப்பினர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றுத் தருமாறு கூடியி ருந்தோர் கோரிக்கை விடுத்தனர். அவர்க ளின் பிரச்சினைகளை ஆராய்ந்த எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷ, இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் இடர் முகாமைத்துவ ஆலோசனைக் குழுவில் எடுத்துரைப்பதாக தெரிவித்தார்.

அவ்வாறே, அலவ்வ துல்ஹிரிய விகா ரைகளில் அமைந்துள்ள இடைத்தங்கல் முகாம்களில் இருக்கும் மக்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள், சுக துக்கங்களைக் கேட்டறிந்த எதிர்க் கட்சித் தலைவர், இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எம்மால் இயலுமான உதவி களைப் பெற்றுத் தருவேன் என்றும் கூடி யிருந்தோர் மத்தியில் உறுதியளித்தார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் காரணமாக துல்ஹிரிய பிரதேச மக்களுக்கு பெரும் சொத்து சேதங்கள் நிகழ்ந்துள்ளன. உயிர் இழப்புகளும் இங்கு நடந்துள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷ இங்கு மேலும் தெரிவித்தார்.





# மன்னார் பகுதிக்கு 4 லட்சம் ரூபா பெறுமதியான நிவாரணம் வழங்கிய சந்நிதியான் ஆச்சிரமம்!

டித்வா புயலால் பாதிக்கப்பட்டமன்னார் பகுதிகளுக்கு 4 லட்சம் ரூபா பெறுமதி யான நிவாரண உதவிகளைச் சந்நிதி யான் ஆச்சிரமம் வழங்கியுள்ளது.

மன்னார் – மாந்தை மேற்கு பிரதேச செயலக நிர்வாகத்தில் உள்ள, காத்தான் குளம் கிராமத்தில் 55 குடும்பங்களுக்கும் மன்னார் பிரதேச செயலக நிர்வாகத்தில் உள்ள, பெரியகமம் கிராமத்தில் 25 குடும்பங்களுக்கும் மடு பிரதேச செயலக நிர்வாகத்தில் உள்ள, குஞ்சுக்குளம் கிரா மத்தில் 20 குடும்பங்களுக்கும் இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உதவித் திட்டத்தைச் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர் களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.









# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பொதுக்கட்டடங்களை புனரமைக்கவும் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்!

## இம்ரான் எம்.பி. வேண்டுகோள்



(ஹஸ்பர் ஏ.எச்.)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுக் கட்டடங்களைச் சுத்தப்படுத்திப் புனரமைப்பதற்கும் கொடுப்பனவுகளை வழங்குவது குறித்து அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

கிண்ணியா சோலைவெட்டுவான் கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை உலர் உணவு பொதிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

வெள்ள அனர்த்தித்தின் பாதிப்பில் இருந்து மீள அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இது பாதிக்கப்பட்டோருக்கு சற்று நிம்மதியைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு வழங்கப்படும் நடைமுறையில் நெகிழ்வு தன்மைகள் பேணப்படவேண்டியுள்ளது. சிலவரையரைகளால் அரச அதிகாரிகள் குறிப்பாக கிராம உத்தியோகத்தர்கள் அரசுக்கும் மக்களுக்கும் இடையில் பணிசெய்வதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

அதுபோன்று வீடுகளை சுத்தம் செய்ய வழங்கப்படும் கொடுப்பனவு பாதிக்கப்பட்ட மதத் தளங்கள், முன்பள்ளிகள், கிராமங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்றவற்றுக்கும் வழங்கப்பட வேண்டும். இது குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டும்.- என்றார்.





### 14 ஆதரவு வாக்குகளுடன்

# சம்மாந்துறைப் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றம்!

(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான முதலாவது வரவு செலவுத் திட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நிறைவேறியது.

சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஐ.எம். மாஹிர் தலைமையில் மாதாந்த கூட்டம் பிரதேச சபை சபா மண்டபத்தில் நடைபெற்றபோதே வரவு செலவுத் திட்டம் நிறைவேறியது.

முன்னதாக , அண்மைய பேரிடரில் உயிர்நீத்த உறவுகளுக்கு இரண்டு நிமிடம் ஆத்மார்த்த அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது சபையின் அனைத்து 22 உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

அடுத்த வருடத்துக்கான இந்த வரவு செலவுத் திட்டத்துக்கு 14 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்திருந்தார்கள். அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உறுப்பினர்களான ஜிப்ரி, காலித், மொகமட், றிஸ்வ்கான், பஸீல், பௌமி, அப்னான், நயீம், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களான வினோகாந், ஹாதிக், சுயேட்சை 2 உறுப்பினர் ஜெயச்சந்திரன், அகில இலங்கை தமிழரசுக் கட்சி உறுப்பினர் சதானந்தா, சுயேட்சை 3 உறுப்பினர் நாசர், சுயேட்சை 1 உறுப்பினர் கபூர் ஆகிய 14 உறுப்பினர்கள் ஆதரவளித்தனர்.

06 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்களான நளீம், நிலவ்பா, சௌபியா, நௌசா, றிபானா மற்றும் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் டனோஜன் ஆகியோரே எதிர்த்தவர்களாவர்.

தேசிய காங்கிரஸ் உறுப்பினர் சஹீல் மற்றும் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் நவாஸ் ஆகியோர் வெளிநடப்பு செய்தவராவர்.

அதன்படி தவிசாளர் மாஹிர் தலைமையிலான முதலாவது வரவு செலவுத் திட்டம் நிறைவேறியது.





# கிழக்கு மாகாணத்தில் சீரற்ற காலநிலையால் 10 பேர் உயிரிழப்பு; 45,420 குடும்பங்கள் பாதிப்பு!

**(மட்டக்களப்பு நிருபர்)**

சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு மாகாணத்தில் 10 பேர் உயிரிழந்ததுடன் 45,420 குடும்பங்களைச் சேர்ந்த 147,885பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட பலத்த காற்று மற்றும் மழை வெள்ளப் பெருக்கால் கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த நலன்புரி நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் தங்களுடைய வீடுகளுக்குச் சென்றுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தகவல் வெளியிட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு மாகாணத்தில் 10 பேர் உயிரிழந்ததுடன் 45,420 குடும்பங்களைச் சேர்ந்த 147,885பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 122 வீடுகள் முழுமையாகவும் 2,182 வீடுகள் பகுதியளில் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலருணவுப் பொருள்களை அரசாங்கம் மற்றும் பொது அமைப்புகள் வழங்கிக்கொண்டிருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலக பிரிவுகளில் இருவர் உயிரிழந்ததுடன் 12,469 குடும்பங்களைச் சேர்ந்த 37,389 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பலத்த காற்றல் இதுரை 11 வீடுகள் முழுமையாகவும் 946 வீடுகள் பகுதியளில் சேதமடைந்துள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து இடைதங்கல் முகாம்களும் மூடப்பட்டு மக்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 11 பிரதேச செயலக பிரிவை உள்ளடக்கிய 214 கிராம சேவகர் பிரிவுகளில் 26,009 குடும்பங்களைச் சேர்ந்த 86,685 பேர் பாதிக்கப்பட்டுள்ளது. இதுவரை 727 வீடுகள் பகுதியளில் சேதமடைந்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் 08 பேர் உயிரிழந்ததுடன் 6,942 குடும்பங்களைச் சேர்ந்த23,781பேர்பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 111 வீடுகள் முழுமையாகவும் 509 வீடுகள் பகுதியளில் சேதமடைந்துள்ளன என்று அந்த தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# காணி உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தால் வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்!

## மலையக மக்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

மலையக மக்களுக்கு காணி உரிமையை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தால், வீட்டுப் பிரச்சினையை தீர்ப்பதற்கு உரிய வழிமுறை பிறக்கும் உன்று ஜீவன் தொண்டமான் எம்.பி. ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

நேற்றைய இந்த மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின் முதலாவதாக, கடந்த சில நாள்களுக்கு முன்னர், நாட்டில் ஏற்பட்ட அசாதாரண காலநிலை மாற்றத்தால் உயிரிழந்த நுவரெலியா மாவட்ட சொந்தகளுக்காக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து இதில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவித்த இ.தொ.கா. பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் "மலையக மக்களுக்குக் காணி உரிமையை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தால், வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உரிய வழிமுறை பிறக்கும்" என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

சீர்திருத்தம், வீடமைப்பு தொடர்பில் பேசப்பட்டாலும், மலையகத்தில் பெரும் பிரச்சினை ஒன்று உள்ளது. அதாவது தோட்டத்தில் வேலை செய்தால்தான் அடையாளம், சலுகைகள் கிடைக்கப்பெறுகின்றன. தோட்டத்தில் வேலை செய்யாத ஏனையோருக்கு எவ்வித அதிகாரமும் கிடைக்கப்பெறவில்லை. இந்த முறைமை மாற வேண்டும். இது பற்றி மக்களிடம் நேரில் சென்று கேட்டறியலாம் என்றும் கருத்துப் பதிவிட்டிருந்தார்.

பெருந்தோட்டப் பகுதிகளில் ஒன்றரை லட்சம் வீடுகள் தேவைப்படுகின்றன. பாதீட்டு ஒதுக்கீட்டின் பிரகாரம் வருடமொன்றுக்கு 2 ஆயிரம் வீடுகளை அமைத்தாலும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

தமக்கு வீடு வேண்டும் என்ற சிந்தனையே மக்கள் மத்தியில் உள்ளது. எனவே, அவர்கள் வாழ்வதற்கு உரிய காணி உரிமையை வழங்கினால் வீடில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழி பிறக்கும் என தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க,

பேரிடர் நிலையால் ஏற்பட்ட பாதிப்புகளை தீர்ப்பதற்கு தற்போது முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. மக்கள் எதிர்நோக்கும் நீண்டகால பிரச்சினைகள் நாம் விரிவாக பேசுவோம்.

ஒருவருக்கு 6 பேர்ச்சஸ் என வைத்தாலும் ஒன்றரை லட்சம் பேருக்கு 9 லட்சம் பேர்ச்சஸ் காணி தேவைப்படும். இதனை எவ்வாறு பெற்றுக்கொள்வது, தொழில்நுட்ப காரணி, பாதுகாப்பான இடம் என்பன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு உங்களை (மலையக பிரதிநிதிகளை) சந்தித்து கலந்துரையாட உள்ளேன்.

தேசிய வேலைத் திட்டம் ஒன்றை அமைத்து இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சிப்போம். – என்றார்.

மக்களுக்கு வழங்குவதற்கு உரிய காணி வளம் உள்ளது. மக்கள் தற்போது வாழும் லயன் அறைகள் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளை வழங்கினாலேயே அவர்களுக்கு வீடுகளை அமைத்துக்கொள்ள முடியும். இது தொடர்பில் அமைச்சரவை தீர்மானமொன்று 2024 இல் நிறைவேற்றப்பட்டது. அதனை அமுல்படுத்தலாம் என்றும் ஜீவன் தொண்டமான் இறுதியாகக் கருத்துத் தெரிவித்திருந்தார்.



# பழமொழிகளும் பெண்களும்!

**கருனிகா லிங்கேஸ்வரன்,**
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



பழமொழி என்பது ஓர் பழமையான மொழி ஆகும். குறிப்பாக இந்தப் பழமொழி என்பது எமது அன்றாட வாழ்வில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் வாய்வழி வந்து செல்லும் படைப்பாகவே காணப்படுகிறது.

அதுவும் பெரும்பாலும் வயது முதிர்ந்தவர்கள், பெரியவர்கள், படித்தோர்கள் இடத்தில் அதிகமாய் காணப்படுகிறது. அத்தோடு பழமொழிகளைக் கொண்டு மக்களின் பண்பாட்டையும், நாகரீகத்தையும் அறிந்து கொள்ள முடிகிறது. அந்த வகையில் ஒரு வீடு என்று பார்க்கும் போது அங்கு பேரப்பிள்ளைகள் (சிறுவர்கள்) இடத்தில் ஒவ்வொரு பாட்டன் பாட்டியும் பழமொழிகளை ஏதோ ஒரு வகையில் கூறிக் கொண்டே இருப்பார்கள்.

ஆதி காலம் தொட்டே பெண்கள் சமூகத்தால் போற்றப்பட்டு வருகிறார்கள். பெண்கள் வீட்டிலும் சமூகத்திலும் பல விடயங்களை அது ஒரு சடங்குகளாக இருக்கலாம் சேவைகளாக இருக்கலாம் ஒரு செயல்பாடாக இருக்கலாம் என்று ஏதோ ஒன்றை செய்து அனுபவம் காண்பவர்கள். அப்போது அவர்கள் அதன்வழி உருவாக்கிய முதுமொழிகளாகவே பலதரப்பட்ட பழமொழிகள் காணப்படுகின்றன.

பெரும்பாலான சமயங்களில் ஊர் கதைகள் பேசுவதிலோ, உறவுகளிடத்தில் பேசுவதிலோ எனப் பெண்கள் அதிக ஈடுபாடு காட்டுகிறார்கள். இதனால் ஒரு சமூகம் என்று பார்க்கும்போது பழமொழிகளை அதிகம் பயன்படுத்துவதாக பெண்களே காணப்படுகிறார்கள். அந்த வகையில் பழமொழியும் பெண்களும் என்ற தலைப்பை நோக்கும் போது சில வேளைகளில் அவை பெண்களுக்கு நன்மையை பிரதிபலிப்பதாகவும் அதே போன்று பெண்களை இழிவுபடுத்துவதாகவும் அமையப் பெற்றுள்ளன.

எனவே அதை பற்றி சற்று நோக்குவோம். “அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் பிறத்தி பிறத்தி தான்” என்ற பழமொழி ஆனது பெண் சமூகத்தோடு எவ்வாறு தொடர்புடையது என நோக்கினால், ஒரு சமுதாயத்தில் பெண் தனது பிறந்த வீட்டை விட்டு புகுந்த வீடு செல்லும் போது அங்கு புகுந்த வீட்டுக்காரர்களால் வேறுபடுத்தி பார்க்கப்படும் நிலையானது அதாவது தங்கள் குடும்பத்தோடு இவளும் ஒருத்தியென எண்ணாது சிலர் வேறுபடுத்தும் செயற்பாடுகளின் போது இவ்வாறான பழமொழிகள் கூறப்படுகின்றது.

இது பெண்களிடத்தில் மனக்கஷ்டங்களை வெளிக்கொண்டு வருவதாகவும் மனக்குமுறலை வெளிப்படுத்துவதாகவும் இப்பழமொழி அமையப் பெற்றுள்ளது. அத்தோடு “பெட்ட கோழி கூவி விடியாது” என்னும் பழமொழியும் கிராமப்புறங்களில் அதிகமாக பெண்களை மையமாக கொண்டு பேசப்படுகிறது. அதன் பொருளாக குடும்பம் அல்லது நிர்வாகம் என்பது ஆண்கள் தலைமையில் இருந்தால் சிறப்பு என்றும் அதேநேரத்தில் பெண்கள் அதில் தலைமை தாங்கி நிற்கும் போது அது சிறப்பாக இருக்காது என்றும் பெண்களை இழிவுபடுத்துவதாக கூறப்பட்டு வருகிறது.

மேலும்,”பெண் புத்தி பின் புத்தி” என்ற பழமொழியானது பெண்களின் எண்ணங்கள் அல்லது தீர்மானங்கள் தாமதமாக வரும் என்றும் அல்லது பின்னால் தான் விளைவு தெரிய வரும் என சமுதாயம் நம்புகிறது. அதாவது, பெண்கள் எதையும் வெல்ல விரைவாக யோசிக்க மாட்டார்கள், அல்லது அவர்கள் அறிவு நிலைத்துவிடாது என்று குறைக்கும் பாலின பாகுபாடான பழமொழியாக இது காணப்படுகிறது. ஆனால் பெண்கள் முன்னோடியாக இன்று சமூகத்தில் செயல்படுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அதேபோல மாறாக பெண்களை மேன்மைப்படுத்துவதாகவும் சில பழமொழிகள் காணப்படுகின்றன. குறிப்பாக “தாய் இல்லா வீடு தூணில்லா மாடி”என தாய்மையை போற்றுவதாக அமைகிறது. தாய்மை என்பது பெண் என்ற அகராதியில் மிக முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது.

அவ்வாறாக ஒரு மாடி குடியிருப்பு தூண் இன்றி இருக்காது என்பது போல ஒரு குடும்பம் என்றாலும் அங்கு தாய் முக்கியம் என்று கூறுவதாக இந்தப் பழமொழி அமையப் பெற்றுள்ளது.

மேலும் “பொம்பிள சிரிச்சா போச்சு புகையில விரிச்சா போச்சு”, “ கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்”, “பெண் வாய்ச் சுரங்கம் ஆண் வாய்ச் சுடுகாடு“ என்றவாறு பல பழமொழிகள் கூறப்பட்டது வருகிறது.

இவ்வாறு பழமொழியும் பெண்களும் என்று பார்த்ததில் நவீனம் வளர்ச்சி பெற்றாலும் பழமொழி இன்றும் அதிகமாக பேசப்பட்டே வருகின்றது. பழமொழி பேசுவது அதிகமாக பெண்கள் வர்க்கமாக இருப்பதோடு அவற்றின் அர்த்தங்கள் அடிப்படையில் ஒவ்வொன்றும் வெவ்வேறு அர்த்தங்களை கொண்டுள்ளன. குறிப்பாக மனவலிகளை கூறுவதாகவும், சிலவேளைகளில் இழிவுபடுத்துவதும், அத்தோடு பெருமை போற்றவும் என்று அமைகிறது.

# தமிழ்! உலகுக்கே ஒளி தரும் மொழி...

*(உலக தமிழ்மொழி தினம் - மார்கழி10)*

பசுமைத் துளியில் பிறந்த எழுத்துகள்,
பாட்டுப் பழமொழியில் நிலையான சொற்கள்
மழலை மொழியாய் உயிர்த்தெழுந்த தமிழ்,
மண் வாசத்தோடு கலந்த சுவைத்தமிழ்

சங்கம் தொடங்கிய காலமுதற்கே தாய்தமிழ்,
உலகத் தருமங்களோடு இணைந்த வழித்தமிழ்
அறிஞர்கள், கவிஞர்கள் சொன்ன அறிவின் நடை,
அது தான் தமிழின் காலத்தைக் கடக்கும் நடை!

விண்ணைத் தொட்ட கவிதைகளில் அது பிறந்தது,
மனத்தைத் தொட்ட உணர்வுகளில் அது நின்றது
ஒலி மட்டும் அல்ல – உணர்வின் உயிராய்,
ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் வாழ்கிறது!

தென்னகம் தொடங்கி உலகின் உள்ளே தமிழ்,
தமிழ் பேசும் உதடுகள் – ஒளிக்கதிர்கள்!
உலகம் அறிந்த மொழிகளிலே அழகிய ஒன்று
உயிருடனே வாழும் மொழி – தமிழ்

“தமிழ் பேசுவோம், பெருமை சேர்ப்போம் –
தமிழால் வாழ்வோம், உலகைத் தொடுவோம்”



**நடராசா கோபிராம்,**
உளவியல் சிறப்புக்கலை மாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்

# எங்கும் சினிமா... எதிலும் சினிமா!

நம் நாட்டில் அசம்பாவிதங்கள் தலைவிரித்து ஆடும் நிலையில் நாள்தோறும் பல சம்பவங்கள் பதிவாகிக் கொண்டு தான் இருக்கின்றன. எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, போதைப்பொருள் பாவனை என பாதாள உலகத்தில் நடப்பவை போல நடந்து கொண்டிருக்கின்றன.

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பேரிடரால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றார்கள். அதிலிருந்து எவ்வாறு மீளெழுச்சி அடையலாம் என்று திண்டாடிக் கொண்டிருக்கும் பொழுது பார்த்தால், திருநெல்வேலியில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் பதிவாகியிருக்கின்றது. இங்கு எதிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது? என்ற வினா எழுகின்றது. இது தொடர்பாக கதைப்பவர்களைப் பார்த்தால் “என்னப்பா இது படங்களில வெட்டுற மாதிரி சாதாரணமா வெட்டிவிட்டுப் போறாங்கள் “ என்கின்றனர். இதிலும் சினிமாவை விட்டு வைக்கவில்லை.

எந்த ஒரு சம்பவத்தை எடுத்துக் கொண்டாலும் ஏதோவொரு வகையில் சினிமாவின் தாக்கம் ஊடுருவி இருக்கின்றது. சடங்கு, சம்பிரதாயம், பஞ்சமா பாதகங்கள் என அனைத்தும் சினிமாவின் பிடியிலிருந்து தப்பிக்க முடியாதவையாக இருக்கின்றன.போதைப் பொருள் பாவனை மற்றும் கடத்தல் சம்பவங்கள், நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவம், சினிமாவின் பாணியில் இடம்பெற்ற இரு குழுக்களிடையேயான மோதல், சங்குப்பிட்டிப் பாலத்தில் சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் கொலை, வவுனியாவில் தலை வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவம், சங்கிலி அறுக்கப்பட்ட சம்பவம் என அனைத்தின் பின்னணியிலும் ஏதோ ஒரு வகையில் சினிமாவின் செல்வாக்கு இருக்கின்றது.

இளைஞர்களின் போக்கிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. அவர்களது நடை, உடை பாவனை, பழக்கவழக்கங்கள், சிகை அலங்காரங்கள் என்பன அனைத்தும் மாறியிருப்பதனைக் காணலாம். சினிமாவில் எது நடைமுறையில் இருக்கின்றதோ அதை அப்படியே முன்மாதிரியாக எடுத்துக் கொள்கின்றார்கள். இதன்



பின் விளைவுகளை யார் அனுபவிக்கப் போகின்றார்கள்? என்பதை உணராமலே அவர்களது வாழ்க்கைக்கோலம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

எம்மை முன்னேற்றிக் கொள்வதற்கு எத்தனையோ வழி வகைகள் இருக்கின்றன.ஆனால் அவற்றை எல்லாம் கவனத்தில் கொள்வதே இல்லை. தவறான பாதையையே பின் தொடர்கின்றார்கள். இதனால் மற்றவர்களின் கேலிக்கும், கிண்டலுக்கும் ஆளாகிக் கொண்டிருக்கின்றார்கள். அது வெறுமனே சினிமா. அதுவே எமது வாழ்க்கை என்று பின்பற்றுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அது பற்றிய தெளிவு இருந்தாலே போதுமானது. சினிமாவைப் பொழுது போக்கிற்காகப் பார்ப்பது என்பது அவரவர் தனிப்பட்ட விருப்பம். ஆனால் அதிலிருந்து எவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதில் கவனமாக இருக்க வேண்டும். நல்லவற்றை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் தீங்கான விடயங்களை எடுத்துக் கொள்வது என்பது தவறு. ஆகையால் சற்று சிந்தனை செய்வது அவசியம்.



**ரம்மியா புஸ்பகரன்,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



# தி.மு.கவை நம்ப வேண்டாம் எம்மை ஏமாற்றி விடுவார்கள்

## புதுச்சேரியில் விஜய் உரை

“புதுச்சேரி மக்களுக்கு ஒன்று மட்டும் சொல்லிகொள்கிறேன். தி.மு.கவை நம்பாதீர்கள். அவர்கள் நம்பவைத்து ஏமாற்றி விடுவார்கள்.”

– இவ்வாறு த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் இன்று நடைபெற்ற த.வெ.க. பொதுக்கூட்டத்தில் விஜய் பேசும்போது,

“ஒன்றிய அரசு தான் தமிழகத்தை ஒரு மாநிலமாகவும், புதுச்சேரியை யூனியன் பிரதேசமாகவும் பார்க்கிறது. ஆனால் நாம் வேறு வேறு கிடையாது. எந்த மாநிலமாக இருந்தாலும் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்கள் நம் உறவுதான்.

1977 இல் தமிழ்நாட்டில் ஆட்சியை பிடிப்பதற்கு முன்பாகவே, எம்.ஜி.ஆர். 1974 இல் புதுச்சேரியில் ஆட்சியை பிடித்தார். எம்.ஜி.ஆர். நமக்கானவர், அவரை ‘மிஸ்’ பண்ணிடாதீங்க என தமிழ்நாட்டிற்கு ‘அலெர்ட்’ செய்ததே புதுச்சேரி தான். அப்படிப்பட்ட புதுச்சேரியை மறக்க முடியுமா?.

தமிழக மக்களைப் போலவே, புதுச்சேரி மக்களும் கடந்த 30 ஆண்டுகளாக என்னை தாங்கி பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் இந்த விஜய் தமிழகத்துக்கு மட்டும்தான் குரல் கொடுப்பார் என நினைக்காதீர்கள். புதுச்சேரி மக்களுக்கும் சேர்ந்து குரல் கொடுப்பேன். அது எனது கடமையும்கூட.

புதுச்சேரி அரசாங்கம் தமிழகத்தில் உள்ள தி.மு.க. அரசாங்கத்தை போன்றது கிடையாது. வேறு ஒரு அரசியல் கட்சி நடத்தும் நிகழ்ச்சியாக இருந்தாலும், அந்த நிகழ்ச்சிக்கு தன்னெழுச்சியாக வரக்கூடிய மக்களுக்கு பாதுகாப்பு கொடுத்து, பாரபட்சம் இல்லாமல் இந்த அரசு நடந்து கொள்கிறது. புதுச்சேரி முதல்வருக்கு எனது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதை பார்த்தாவது தமிழகத்தில் உள்ள தி.மு.க. அரசு கற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் அவர்கள் கற்றுக் கொள்ள மாட்டார்கள். வரப் போகின்ற தேர்தலில் அவர்கள் 100 வீதம் கற்றுக் கொள்வார்கள். மக்கள் பார்த்துக் கொள்வார்கள்.

புதுவை அரசு கூட்டணி ஆட்சியில் இருந்தாலும் புதுச்சேரியை ஒன்றிய அரசு எந்த விஷயத்திலும் கண்டு கொள்ளவில்லை என்பது மக்களுக்கே தெரியும். மாநில அரசு கோரிக்கை மட்டுமா அவர்கள் கண்டு கொள்ளவில்லை? இங்கு வளர்ச்சி ஏற்பட அவர்கள் துணை நிற்கவில்லை என கேள்விப்படுகிறோம். புதுச்சேரிக்கு இன்னும் மாநில அந்தஸ்து கொடுக்கவில்லை. பலமுறை புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கோரி சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் மூடப்பட்ட 5 மில்கள், பல்வேறு தொழிற்சாலைகளை மீண்டும் திறக்க இன்னும் ஒரு துரும்பை கூட கிள்ளி போடவில்லை.

பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் வேலை வாய்ப்புக்காக அவர்கள் எதையுமே செய்யவில்லை. புதுச்சேரியில் ஒரு ஐ.டி நிறுவனம் உருவாக வேண்டும் என்ற எண்ணம் கூட கிடையாது. இது குறித்து யார் பேசினாலும் அவர்களின் காதுகளில் விழவே இல்லை. தமிழ்நாட்டை ஒதுக்குவது போல், புதுச்சேரியையும் ஒன்றிய அரசு ஒதுக்கக் கூடாது. இந்திய அளவில் ‘ரேஷன்’ கடைகளே இல்லாத இடம் புதுச்சேரிதான். புதுச்சேரி மக்களுக்கு ஒன்று மட்டும் சொல்லிகொள்கிறேன். தி.மு.கவை நம்பாதீர்கள். அவர்கள் நம்பவைத்து ஏமாற்றி விடுவார்கள். வரவிருக்கும் புதுச்சேரி தேர்தல் களத்தில் த.வெ.க. கொடி பட்டொளி வீசி பறக்கும். வெற்றி நிச்சயம். ” என்று தெரிவித்துள்ளார்.

# தேர்தலில் தி.மு.க துடைத்தெறியப்படும்: ஸ்டாலினுக்கு அமித் ஷா எச்சரிக்கை

தமிழகத்தில் நடக்க இருக்கும் சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க துடைத் தெறியப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சரும் பா.ஜ.க. மூத்த தலைவருமான அமித் ஷா ஆவேசமாகக் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலத்தில் பல்வேறு அரசு திட்டங்களை அமித் ஷா தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் அவர் உரையாற்றுகையில்,

“2014 மக்களவைத் தேர்தல் தொடங்கி தற்போது வரை பா.ஜ.க. தொடர் வெற்றிகளைப் பெற்று வருகிறது. 2024 மக்களவை தேர்தல் வெற்றியின் மூலம் தொடர்ந்து மூன்றாவது முறையாக பிரதமர் ஆனார் நரேந்திர மோடி. இது பல ஆண்டுகளுக்குப் பின்னர் படைக்கப்பட்ட சாதனையாகும்.



பிரதமர் மோடியின் தலைமையிலான ஆட்சியில், இந்திய தேசம் அனைத்து துறைகளிலும் வளர்ச்சி கண்டு, உலக அளவில் சிறந்த நாடாக திகழும் என்ற நம்பிக்கையை மக்கள் கொண்டுள்ளனர். எதிர்க்கட்சிகளுக்கு தலைவர்களோ அல்லது கொள்கைகளோ இல்லை. தேசத்தின் எந்தப் பகுதியிலும் அவர்கள் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

இந்த மேடையில் இருந்து மம்தா பானர்ஜி மற்றும் ஸ்டாலினுக்கு ஒன்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பிஹாரை தொடர்ந்து மேற்கு வங்கத்திலும், தமிழகத்திலும் தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றி பெற்று திருப்புமுனையை ஏற்படுத்தும். அதற்கு தயாராக இருங்கள்.

எதிர்வரும் தேர்தல் முடிவுகள் வரட்டும். மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸ/ம், தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும் துடைத்தெறியப்படும்.” என்று தெரிவித்துள்ளார்.



# ஜப்பானின் வடக்குக் கடற்கரையில் நிலநடுக்கம் 40 சென்ரி மீற்றர் உயர அலைகள் உருவாகின

ஜப்பானின் வடக்கு கடற்கரையில் 7.6 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதன் விளைவாக 40 சென்ரி மீற்றர் (16 அங்குலம்) உயரமான சுனாமி அலைகள் உருவாகின என சர்வ தேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள் ளன.

இந்த சுனாமி அலைகள் ஹொக் கைடோ மாகாணத்தில் உள்ள உர காவா நகரத்தையும் அமோரி மாகா ணத்தில் உள்ள முட்சு ஒகவாரா துறை முகத்தையும் தாக்கியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உள்ளூர் நேரப்படி நேற்று இரவு 11.15 மணியளவில் 7.6 ரிக்டர் அளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதையடுத்து அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் உடனடியாக சுனாமி எச்சரிக்கையை விடுத்தது.

ஹொக்கைடோ, அமோரி மற்றும் இவாட் மாகாணங்களுக்கு 10 அடி உயரம் வரை சுனாமி அலைகள் எழும்ப வாய்ப்புள்ளதாக குறிப்பிட்டு வானிலை ஆய்வு மையம் இந்த சுனாமி எச் சரிக்கையை விடுத்திருந்தது.

அமோரி கடற்கரையிலிருந்து 80 கிலோமீற்றர் தொலைவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்ட நிலையில் நில நடுக்கத்தின் அளவு ஜப்பானிய குடி யிருப்பாளர்களை மின்சாரம் இல்லா மல் தவிக்க வைத்ததுடன் அமோரி மாகாணத்தில் உள்ள ஒரு ஹோட்டலில் பலர் காயமடைந்தனர்.

ஜப்பானிய பிரதமர் நிலநடுக்கத் திற்கு மூன்று கட்ட மீட்புப் பணிகளை அறிவித்ததுடன் அவசரகால பணிக்குழு ஒன்றையும் நிறுவினார்.

அத்துடன் நிலநடுக்கத்தால் பாதிக் கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் விரைவில் வெளியேறுமாறு ஜப் பானிய அரசாங்கம் அறிவுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் இந்தியாவின் அரிசிக்கு இறக்குமதி வரி விதிக்க ட்ரம்ப் பரிசீலனை

இந்தியா, வியட்நாம், தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்வது தங்களுக்கு இழப்பை ஏற்படுத்துவதாக அமெ ரிக்க விவசாயிகள் குற்றம்சாட்டிய நிலை யில், அவற்றுக்கு இறக்குமதி வரி விதிப்பது குறித்து தனது அரசு பரி சீலித்து வருவதாக ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



வெள்ளை மாளிகையில் வேளாண் பொருள்கள் உற்பத்தியாளர்கள் உட னான வட்டமேசை விவாத கூட்டம் நடை பெற்றது. அப்போது விவசாயிகளுக் காக சுமார் 12 பில்லியன் டொலர்களை விடுவிப்பதாக ஜனாதிபதி ட்ரம்ப் அறி வித்தார். அதன் பிறகு அவர் கருத்து தெரிவிக்கையில்,

“அமெரிக்க உற்பத்தியாளர்களை வெளிநாட்டு இறக்குமதி கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது எனது நோக்கம். இதை நான் மீண்டும் தெரி வித்துக் கொள்கிறேன்.

தற்போது இந்தியா, வியட்நாம், தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளில் இருந்து அதிகளவில் அரிசியை இறக்குமதி செய்வது அமெரிக்க விவசாயிகளுக்கு இழப்பை ஏற்படுத்து வதாக அறிந்தேன். நிச்சயம் அதை அதிகளவில் குவிப்பது கூடாது. அதில் நான் கவனம் செலுத்த வேண்டி உள்ளது. கனடாவில் இருந்து அதிகள வில் உரங்கள் இறக்குமதி ஆகின்றன. அதனால் தேவைப்பட்டால் கடுமையான வரிகளை விதிப்போம்.” என தெரி வித்தார்.

அமெரிக்கப் பொருள்களுக்கு அதிக வரி விதிக்கும் நாடுகளுக்கு எதிராக பரஸ்பர வரிவிதிப்புக் கொள்கையை அமெரிக்கா கடை பிடிக்கும் என ஜனாதி பதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

கனடா, மெக்சிகோ உட்பட உல கின் பல்வேறு நாடுகளுக்கும் கடும் இறக்குமதி வரிகளை விதித்துள்ளார். தனது இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரி வித்ததால், சீனா மீதான வரியை ட்ரம்ப் பல மடங்கு உயர்த்தினார். பின்னர், சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி, வரி விகிதத்தை குறைத்தார்.

இந்தியப் பொருள்களுக்கு ஏற்கெ னவே 25 சதவீத வரி விதித்த ட்ரம்ப், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை காரணம் காட்டி, கூடுத லாக 25 சதவீதம் வரியை விதித்து, இந் தியாவுக்கான வரியை 50 சதவீதமாக உயர்த்தினார். இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

ட்ரம்பின் வரிவிதிப்பு நடவடிக்கை யால், இந்தியாவில் தொழில் துறைகடும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளது

பக்கங்கள் - 03

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 09/12/2025

## பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 13 பேர் கைது



C3



# புலம்பெயர் மருத்துவர்களுக்கு கனடாவில் நிரந்தரக் குடியுரிமை

கனடாவிலுள்ள வெளிநாட்டு மருத்துவர்களுக்கு நிரந்தர குடியுரிமை வழங்குவதற்கு மத்திய அரசு புதிய திட்டத்தை அறிவித்துள்ளது.

கனடா முழுவதும் கடுமையாக காணப்படும் மருத்துவர் பற்றாக்குறையை சமாளிக்கும் நோக்கில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், நாட்டில் தற்காலிக குடியிருப்பாளர்களாக பணியாற்றும் வெளிநாட்டு மருத்துவர்களுக்கு நிரந்தர குடியுரிமை வழங்கப்படவுள்ளது.

இந்த விடயத்தை குடியேற்ற அமைச்சர் லீனா தியாப் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவித்த அவர், 5000 வெளிநாட்டு மருத்துவர்களுக்கு கூடுதல் இடங்கள் ஒதுக்கப்பட உள்ளன எனவும்

C2

# கனடா விவசாயப் பொருள்கள் மீது கூடுதல் வரி விதிக்க ட்ரம்ப் திட்டம்

கனடாவின் விவசாய பொருள்கள் மீது கூடுதல் வரி விதிக்க அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைன், ரஷியா இடையிலான போர் சுமார் 3 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வரும் நிலையில், ரஷியாவிடம் இருந்து அதிக அளவில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் மீது அமெரிக்க அரசு கடுமையான வரிவிதிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதனிடையே, இந்தியா, அமெரிக்கா இடையே வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் இரு தரப்பும் பல்வேறு சுற்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இந்நிலையில், இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரசி உள்ளிட்ட விவசாய விளைபொருள்கள் மீது கூடுதல் வரி விதிக்க அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.



அதேபோல், கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் விவசாய உரங்கள் மீதும் கூடுதல் வரி விதிக்கப்பட உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# கனடாவுடனான வர்த்தகப் பேச்சுக் குறித்து நேர்மறையான கருத்தை வெளியிட்டார் ட்ரம்ப்



அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், கனடா வைப்பற்றி சில நேர்மறை கருத்து களை வெளியிட்டுள்ளார்.

ஆனால், கனடாவோடு வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங் குமா என்று கேட்டபோது, அவர் “நாம் பார்க்கலாம்” என்று மட்டும் பதிலளித் துள்ளார்.

பல சமயங்களில் கனடா உற்பத்தி செய்யும் அதே பொருள்களை தங்களும் உற்பத்தி செய்வதால், முரண்பாடுகள் நீடித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபரில், கனடாவின் ஒன்டாரியோ மாகாண அரசினால் வெளியிட்ட ஒரு தொலைக்காட்சி விளம் பர விளக்கத்தால் வர்த்தக பேச்சுவார்த் தைகள் நிறுத்தப்பட்டன.

அண்மையில் கனடிய பிரதமர் மார்க் கார்னி, அமெரிக்காவிற்கு விஜயம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வர்த்தக ஒப்பந்தங்கள் மீண்டும் தொடங்குமா? என்ற கேள்விக்கு ட்ரம்பின் “நாம் பார்க்கலாம்” என்ற பதிலில் உறுதியற்றதாக உள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

கடந்த சில மாதங்களில் பொருள்கள், இரும்பு, வாகன உற்பத்தி, மரப்பொருள் உள்ளிட்ட பல துறைகளில் அமெரிக்க வரிகள் மற்றும் கட்டுப்பாடுகள் கனடா விற்கு சவாலாக உள்ளன.




# கனடாவில் கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட 4 இளைஞர்கள் பீல் பொலிஸாரால் கைது

மிசிசாகா நகரில் உள்ள எரின் மில்ல்ஸ் டவுன் சென்டர் வர்த்தக நிலை யத்தில் நடைபெற்ற கொள்ளை முயற்சி யில் சம்பந்தப்பட்ட 4 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பீல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுத்தியல்கள் ஏந்திய முகமூடி அணிந்த நான்கு பேர் வர்த்தக நிலை யத்துக்குள் நுழைந்து கொள்ளை முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அங்கு பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரி சந்தேகநபர்களைக் கவனித்த தும் உடனடியாக துரத்தினர்.

இதில் ஒருவரை அங்கிருந்தே கைது செய்தனர். மற்ற மூவர் திருடப்பட்ட ஹோண்டா CR-V வாகனத்தில் தப்பி சென்றனர் என கூறப்பட்டது.

சில நிமிடங்களில் பொலிஸார் அந்த வாகனத்தை கண்டுபிடித்து வாக னத்தை முற்றுகையிட்டனர்.

பொலிஸார் வெளியிட்ட காணொலி யில், இரண்டு பொலிஸ் வாகனங்கள் சந்தேக வாகனத்தை முன்னிலையும் சாரதி கதவுபுறமும் மறித்துக் கொண்ட காட்சிகள் பதிவாகியுள்ளன.

வாகனம் நிறுத்தப்பட்ட சில வினாடி களில் ஒருவர் ஓடிப்போக முயன்றார். அதிகாரிகள் துரத்தி பிடித்தனர்.

ஏனைய சந்தேகநபர்களும் தப்பிக்க முயன்றபோதும் பொலிஸார் அவர்களை கைது செய்தனர்.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. வர்த்தக நிலை யத்தில் இருந்து பொருள்கள் எதுவும் திருடப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

14 முதல் 17 வயதுக்குள் உள்ள இளைஞர்கள் 4 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

**புலம்பெயர்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இவர்கள் தற்போதைய குடியேற்ற அள வுக்கு மேல் சேர்க்கப்படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டத்தின் கீழ் குடும்ப மருத் துவர்கள், அறுவைச் சிகிச்சை நிபு ணர்கள், ஆய்வக மற்றும் கிளினிக்கல் மருத்துவ நிபுணர்கள் போன்ற வெளி நாட்டவர்கள் நன்மை அடைவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாணங்கள் மற்றும் பிராந்தி யங்கள் உரிமம் பெற்ற மருத்துவர்களை (Express Entry) வழியாக பரிந்து ரைக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள் ளது.

பரிந்துரைக்கப்பட்ட மருத்துவர்க ளின் வேலை அனுமதி 14 நாள்களில் செயல்படுத்தப்படும் எனவும் நிரந்தர குடியுரிமை செயல்முறையுடன் இணைந்து மருத்துவருக்கு உடனடியாக பணியாற்ற வசதி செய்து கொடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.





# பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 13 பேர் கைது

ஒன்டாரியோ மாகாணம் முழுவதும் இடம்பெற்ற பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 13 பேரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

துப்பாக்கிச்சூடு, வாகனத் திருட்டு, கொள்ளை மற்றும் கொலை உள்ளிட்ட பல்வேறு வன்முறை குற்றச்செயல்களில் இந்த நபர்கள் தொடர்புபட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த 13 பேர் மீது 150 இற்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என யோர்க் பிராந்திய பொலிஸ் தெரிவித்துள்ளது.

சுமார் ஒரு வருடங்களாக பல பிராந்திய பொலிஸ் இணைந்து நடத்திய ‘ப்ராஜெக்ட் ரேங்கிலர்’ என்ற விசாரணையின் மூலம் இந்த கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பல்வேறு குழுக்கள் மற்றும் இடங்களைச் சேர்ந்த ஆண்கள் இணைந்து, லாபமீட்டும் நோக்கில் வன்முறைச் செயல்களில் ஈடுபட்ட அமைப்பைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டொரோண்டோ, பீல், லண்டன் (ஒன்டாரியோ), கியுபெக் மற்றும் ஒன்டாரியோ மாகாண பொலிஸ் பிரிவுகள் இணைந்து விசாரணையில் பங்கேற்றுள்ளன.

